




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ நவம்பர். 04, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 30 ❖ ரூ.10


## வடகொரியா மேலும் 3 ஏவுகணைகளை வீசியது

# அட்ராசிட்டி

### தென்கொரியாவின் உல்லியுங் தீவில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும், பதுங்கு குழிகளில் தங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

தென்கொரியா, நவ. 04–

வடகொரியா இந்த ஆண்டு தொடக்கம் முதலே ஏவுகணை சோதனை அடிக்கடி நடத்தி வருகிறது. இதற்கு தென் கொரியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தாலும் அதை கண்டு கொள்ளாமல் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்துகிறது.



இதற்கிடையே தென் கொரியா– அமெரிக்கா இணைந்து போர் பயிற்சி செய்வதற்கு மிரட்டல்விடும் வகையில் புதன்கிழமை ஒரே நாளில் 23 ஏவுகணைகளை வீசி வட கொரியா சோதனை நடத்தியது. தென் கொரியா எல்லையை நோக்கி வீசப்பட்ட ஏவு கணைகளில் ஒன்று தென் கொரியாவின் சோக்கோ நகர் அருகே விழுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து தென் கொரியாவின் உல்லியுங் தீவில் வான்வழி தாக்குதல் பற்றிய அபாய எச்சரிக்கை எழுப்பப்பட்டது.

இதற்கிடையே வடகொரியாவுக்குபதிலடி கொடுக்கும் வகையில் தென் கொரியாவும் ஏவுகணை சோதனை நடத்தியது. வடகொரியா நோக்கி 3 ஏவுகணைகள் வீசப்பட்டன. கொரியா தீபகற்பத்தில் போர் பதற்றம் நிலவும் சூழலில் வடகொரியா இன்று மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தி உள்ளது. இதுதொடர்பாக தென் கொரிய ராணுவம் கூறும்போது, 'வடகொரியா நீண்ட தூர மற்றும் இரண்டு குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியுள்ளது' என்று தெரிவித்தது.

இந்த நிலையில் வடகொரியா வீசிய ஒரு ஏவுகணை ஜப்பான் கடல் எல்லையை கடந்து பசிபிக் கடலில் விழுந்தது. காலை 7.48 மணி அளவில் ஜப்பான் மீது ஏவுகணை பறந்ததாக ஜப்பான் அலுவலகம் தெரிவித்தது.

இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் ஹமாடா கூறும்போது, 'ஜப்பான் தீவு கூட்டத்தின் மேலே ஏவுகணை சென்றது கண்டறியப்பட்டதால் உடனே எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்த தகவலை சரிபார்த்த பிறகு ஏவுகணை ஜப்பானிய தீவுக்கூட்டத்தை கடக்கவில்லை. ஆனால் ஜப்பான் கடலில் விழுந்ததை உறுதிபடுத்தி உள்ளோம்' என்றார். வடகொரியா தொடர்ந்து ஏவுகணை வீசி வருவதால் தென்கொரியா, ஜப்பானில் மக்களுக்கு அவசரகால எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தென்கொரியாவின் உல்லியுங் தீவில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும், பதுங்கு குழிகளில் தங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதேபோல் ஜப்பானின் வடக்கு பகுதியில் 3 பிராந்தியங்களில் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். நேற்று வட கொரியா ஏவுகணையை வீசிய பிறகு ஜப்பான் வடக்கு பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பு இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளின் கீழ் பகுதிக்கு சென்று பதுங்கிக் கொண்டுள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க பெருவுடையார் திருக்கோவில் மாமன்னர் ராஜராஜ சோழன் 1037 வது ஆண்டு சதய விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு மாவட்ட கலெக்டர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் நேற்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன், மாநகராட்சி மேயர் ராமநாதன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரவளி பிரியா கந்த புவனேனி, சதய விழா குழு தலைவர் செல்வம், துணைத் தலைவர் சந்திரசேகர் மேத்தா, தர்மாபுரம் ஆதீனம் குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமி, துணை மேயர் அஞ்சுகம் பூபதி, பரம்பரை அறங்காவலர் பாபாஜி ராஜா பான்ஸ்லே மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் நேற்று சென்னையில் நடைபெற்ற மணிப்பூர் மாநில ஆளுநரும் மேற்குவங்க மாநில பொறுப்பு ஆளுநருமான இல கணேசன் சகோதரர் இல கோபாலன் 80வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு அவருக்கும் அவரது மனைவிக்கும் பொன்னாடை அணிவித்து மரக்கன்று பசுமை கூடை வழங்கி வாழ்த்தினார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் டி ஆர் பாலு உள்ளார்.


# கண்ணீர் அஞ்சலி



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும்,
முன்னாள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவரும்,
முன்னாள் திருமயம் சட்டமன்ற உறுப்பினருமான
திரு.பி.கே.வைரமுத்து அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி கு.மாணிக்கம் அம்மாள்
அவர்கள்

3.11.2022 (வியாழன்) நேற்று மாலை இயற்கை எய்திவிட்டார்கள். அம்மையாரது இறுதி ஊர்வலம் மற்றும் நல்லடக்கம் நாளை சனிக்கிழமை மதியம் 1 மணியளவில் விராச்சிலை அம்மையாரது இல்லத்திலிருந்து நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்

இவண்:–
அ.தி.மு.க புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகம்

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்






தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,705 | Rs.5,107 |

# அனைவருடனும் நல்லிணக்கத்தோடு வாழ விரும்புகிறோம்: கோவையில் ஜமாத் நிர்வாகிகள் பேட்டி



கோவை , நவ.4–

கோவையில் கார் சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்த பகுதியில் உள்ள சங்கமேஸ்வரன் கோயில் நிர்வாகிகளை கோட்டைமேடு பகுதியைச் சேர்ந்த ஜமாத் நிர்வாகிகள் சந்தித்து உரையாடினர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், "அனைத்து தரப்பு மக்களுடனும் ஒரு நல்லிணக்கத்தோடு வாழ்வதையே நாங்கள் விரும்புகிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

கோவை உக்கடம் பகுதியில் சம்பவ நிகழ்விடத்தின் அருகே உள்ள கோட்டை ஈஸ்வரன் கோயிலுக்கு ஜமாத் நிர்வாகிகள் நேற்று சென்றுபார்வையிட்டனர். பின்னர் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது அவர்கள் கூறியது: "3 ஜமாத்களின் சார்பாக கோட்டை சங்கமேஸ்வரன் கோயில் நிர்வாகிகளை சந்தித்து உரையாடினோம். கடந்த வாரம் இந்த பகுதியில் நடந்த சம்பவம் பல்வேறு சமூகங்களுக்கு இடையே ஒரு பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளது.

இஸ்லாமியர்களான நாங்கள்7தலைமுறைகளாக இந்த கோட்டைமேட்டில் வாழ்ந்து வருகிறோம். இந்தப் பகுதியில் நாங்கள் ஒற்றுமையுடன், அண்ணன் தம்பிகளாக கடந்த 200 ஆண்டுகளாக வாழ்ந்துவருகிறோம். இந்த சூழலில் இங்கு நடைபெற்ற கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவத்தை கோட்டைமேட்டில் உள்ள ஜமாத்துகளின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறோம்.

இஸ்லாம் ஒருபோதும் வன்முறையைத்தூண்டும் மார்க்கம் அல்ல. நாங்கள் அமைதியை போதிக்கிறோம். அனைத்து தரப்பு மக்களுடனும் ஒரு நல்லிணக்கத்தோடு வாழ்வதையே நாங்கள் விரும்புகிறோம். எந்தவிதமான மத பூசல்களுக்கும், அரசியலுக்கும் நாங்கள் ஆட்பட்டு விடக்கூடாது என்பதில்நாங்கள்தெளிவாக இருக்கிறோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

# நியூஸ் பேப்பர் விநியோகிப்பதை போல வீடுகளை நோட்டமிட்டு பணம், நகை கொள்ளை

காசியாபாத் , நவ.4–

செய்தித்தாள் விநியோகிப்பாதைபோல வீட்டில் ஆள் நடமாட்டம் உள்ளதா என்பதைநூதன முறையில் நோட்டமிட்டு பணம் மற்றும் நகையை கொள்ளையடித்து சென்றுள்ளனர் கொள்ளையர்கள். இந்தச் சம்பவம் உத்தரப் பிரதேச மாநிலம் காசியாபாத் நகரில் நடந்துள்ளது. போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கொள்ளை நடைபெற்ற வீட்டில் ரவீந்திர குமார் பன்சால் எனும் சீனியர் சிட்டிசனும், அவரது மனைவி மற்றும் மகளும் வசித்து வந்துள்ளனர். அவர்கள் வைஷ்ணோ தேவி கோயிலுக்கு சென்றுவிட்டுபுதன் அன்று வீடு திரும்பியுள்ளனர். அப்போதுதான் கொள்ளை நடந்துள்ளது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. அவர்கள் கடந்த 29-ம் தேதி வீட்டில் இருந்து கோயிலுக்கு புறப்பட்டு உள்ளனர்.

“நாங்கள் வீட்டுக்கு திரும்பிய போது வீட்டின் பிரதான கதவு திறக்கப்பட்டு இருந்தது. வீட்டுக்கு வெளியே செய்தித்தாள் ஒன்று இருந்தது. வீட்டில் உள்ள அறைகள் அனைத்தும் சூறையாடப்பட்டு இருந்தது. பணம், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் களவு போயுள்ளன. இதன் மதிப்பு சுமார் 10 லட்ச ரூபாய் இருக்கும். எங்கள் வீட்டில் நாங்கள் செய்தித்தாள் வாங்குவதில்லை. ஆனால் 29-ம் தேதியிட்ட செய்தித்தாள் வீட்டின் வாசலில் இருந்தது” என பன்சால் தெரிவித்துள்ளார்.

அதை வைத்துதான் வீட்டில் யாரும் இல்லை என்பதை அறிந்து கொள்ளையர்கள் தங்களது கைவரிசையை காட்டியுள்ளனர். போலீசார் இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து, சிசிடிவி ஆதாரங்களின் அடிப்படையில் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். வீடுகளுக்கு பேப்பர் வினியோகிப்பது போல் சென்று வீட்டில் கொள்ளை அடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

தேவி கன்ஸ்ட்ரக்ஸன்
ENGINEERS - BUILDERS - VALUERS & PROMOTORS
West Main Street, (Opp : BSNL Office), PUDUKKOTTAI.
Cell : 94 43 12 04 67, 90 80 90 20 03
(04322) 220467
Er. N.KANAGARAJAN, B.E.,M.I.E.,F.I.V.,PGDQSV.,M.Sc.(val)
Approved Valuer, Charted Engineer & Government Approved Panel Engineer

# புதுக்கோட்டை மாவட்ட கடற்கரை சாலைபகுதிகளில் குழந்தைகளுக்கு பால் தட்டுப்பாடு –பொதுமக்கள் குமுறல்




புதுக்கோட்டை,நவ.4–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதிக்கு உட்பட்ட மணமேல்குடி, கோட்டைப்பட்டினம், அம்மா பட்டினம், மீமிசல் போன்ற பகுதிகளில் ஆவின் பால் தட்டுப்பாடு என பொதுமக்கள் கூறுகின்றனர், குறித்த நேரத்தில் பால் கிடைப்பது இல்லை என்றும் 200 லிட்டர் பால் கொடுக்க வேண்டிய ஆவின் பால் விற்பனை நிலையத்திற்கு 50 லிட்டர் கொடுத்தால் ஆவின் பூத் விற்பனையாளர்கள் என்ன செய்வார்கள் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

தனியார் கம்பெனி பால் எல்லா இடத்திலும் தாராளமாக கிடைக்கிறது ஆனால் அரசால் நடத்தப்படுகின்ற ஆவின் பால் தட்டுப்பாடாக உள்ளது என்றும், மருத்துவர்கள் கூறும் பொழுது குழந்தைகளுக்கு ஆவின் பால் கொடுக்கவும் என்று பரிந்துரை செய்கின்றனர், ஆனால் பால் பூத்துகளில் சென்று ஆவின் பால் கேட்டால் தற்பொழுது இல்லை என்று கூறுகின்றார்கள், இதே நிலைமை தொடர்ந்தால் கிழக்கு கடற்கரை சாலையில் மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும் என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

இதற்கு தமிழக அரசு உடனடியாக தீர்வு கண்டு இந்த பகுதியில் ஆவின் பால் தட்டுப்பாடு இன்றி கிடைக்க வழி செய்யுமாறு பொதுமக்கள் கூறுகின்றனர், சில நாட்களுக்கு முன்னாள் பால்வளத்துறை அமைச்சர் ஆவின் பால் தட்டுப்பாடு இன்றி கிடைக்கும் என்று கூறினார் ஆனால் தற்போது மிகவும் தட்டுப்பாடாக உள்ளது என்று பொதுமக்கள் குமுறுகின்றனர்.

# திருவள்ளுவர் பல்கலை.யில் அம்பேத்கர் படிப்புகள் துறையை தொடங்க இயலவில்லை: ஐகோர்ட்டில் அரசு தகவல்




சென்னை , நவ.4–

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் நிதிநிலை நெருக்கடி காரணமாக டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் படிப்புகள் துறையை தற்போதைக்கு தொடங்க இயலாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தகவல் தெரிவித்துள்ளது.

வேலூர் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் அம்பேத்கர் படிப்புகள் என்ற பெயரில் தனி துறையை அமைக்க 2006-ம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் முதல் சிண்டிகேட் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், இதுவரை அத்துறையை தொடங்குவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக் கூறி பல்கலைக்கழக சிண்டிகேட் முன்னாள் உறுப்பினரும், ஓய்வுபெற்ற பேராசிரியருமான இளங்கோவன் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்தவழக்குநீதிபதிகள் கிருஷ்ணகுமார் மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் அடங்கிய அமர்வில்நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு மற்றும் பல்கலைக்கழகத்தின் தரப்பில், "பல்கலைக்கழகத்தில் நிதி நெருக்கடி உள்ளதால் தற்போதைக்கு இந்த புதிய துறையை தொடங்க இயலாது. நிதி நிலை சீரானதும் இத்துறையை தொடங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டது.

இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், "நிதிநிலை சீராகும்பட்சத்தில் அடுத்த கல்வியாண்டில் அம்பேத்கர் படிப்புகள் துறையை தொடங்குவது குறித்து பரிசீலிக்க வேண்டும்" என தமிழக அரசுக்கும், பல்கலைக்கழகத்துக்கும் உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தனர்.

# ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடத்தில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழா



அரியலூர், நவ.4–

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் மற்றும் ஆண்டிமடத்தில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, ஜெயங்கொண்டம் வட்டாரத்துக்கு உட்பட்ட, குருவாலப்பர் கோவில் மீரா மஹால் திருமண மண்டபத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் மூலம், கர்ப்பிணிதாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா, ஜெயங்கொண்டம் வட்டார குழந்தை வளர்ச்சிதிட்ட அலுவலர் சாருநிலா தலைமையில் நடைபெற்றது. ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், 200 கர்ப்பிணி பெண்களுக்கு வளையல் அணிவித்து, பரிசுப்பொருட்கள்வழங்கி வாழ்த்தி, பேசினார்.

இந்நிகழ்வில் ஜெயங்கொண்டம் திமுக தெற்கு ஒன்றிய கழக செயலாளரும், வேளாண்மை அட்மா குழுத்தலைவருமான இரா. மணிமாறன், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆ.பிரபாகரன், வட்டார தலைமை மருத்துவ அலுவலர் மேகநாதன், குருவாலப்பர்கோவில் ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர் முல்லைநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர், மேற்பார்வையாளர் சத்தியபாமா நன்றி கூறினார்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வன்னியர் திருமண மண்டபத்தில், ஆண்டிமடம் ஒன்றியத்துக்குட்பட்ட கர்ப்பிணிதாய்மார்களுக்கு நடந்த சமுதாய வளைகாப்பு விழாவில், 200க்கும் மேற்பட்ட தாய்மார்களுக்கு, ஆண்டிமடம் வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் மு.காயத்திரி தலைமை வகித்தார், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், கர்ப்பிணி பெண்களுக்கு வளையல் அணிவித்து வாழ்த்தி பேசினார்.

இந்நிகழ்வில் ஆண்டிமடம்வட்டாட்சியர் கலிலூர் ரகுமான், வட்டார தலைமைமருத்துவர் அசோக் சக்கரவர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜா, ஆண்டிமடம்திமுகஒன்றிய செயலாளர்கள் ரெங்க. முருகன் (வடக்கு), ஆர். கலியபெருமாள் (தெற்கு), ஆண்டிமடம் ஊராட்சிமன்ற தலைவர் ஜெயராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர், குழந்தைகள் வளர்ச்சி திட்டமேற்பார்வையாளர் செல்வி நன்றி தெரிவித்தார், மேற்கண்ட நிகழ்ச்சிகளில் அரசு அலுவலர்கள், கர்ப்பிணி பெண்கள்,பொதுமக்கள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# ஆலங்குடி கடைவீதியில்

# பட்டப்பகலில் பெண்ணிடம் செயின் பறிப்பு 3 பேரிடம் போலீசார் விசாரணை

ஆலங்குடி, நவ. 04–

ஆலங்குடி கடைவீதியில் நடந்து சென்ற பெண்ணிடம் செயினை பறித்து தப்பிய திருடர்கள் மூன்று பேரை பிடித்துபோலீசார் விசாரணை நடத்திவருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே காட்டுப்பட்டியைச் சேர்ந்தவர் திருப்பதி மனைவி சத்தியாதேவி வயது(35).இவர் நேற்று மதியம் ஆலங்குடி வடகாடு முக்கம் கடைவீதியில் பொருட்கள் வாங்க நடந்து சென்றார், அப்போது எதிரே ரோட்டில் அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத மூன்று பேர் சத்தியாதேவி அணிந்திருந்த 5 பவுன் தங்க செயினை அறுத்துக்கொண்டு அங்கிருந்து மோட்டார் சைக்கிள்களில் தப்பிச் சென்றனர்.

சத்தியாதேவி கத்தியவுடன் அக்கம் பக்கத்தினர் திருடர்களை விரட்டிச் சென்றனர், திருடர்கள் மின்னல் வேகத்தில் அங்கிருந்து தப்பித்துவிட்டனர், இது குறித்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது, செயினை பறித்து கொண்டு தப்பிய திருடர்கள் புதுக்கோட்டை மேட்டுப்பட்டி அருகே வந்தபோது புதுக்கோட்டை ரோந்து வாகன போலீசார் மூன்று பேரையும் மடக்கி பிடித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர், ஆலங்குடியில் பட்டப்பகலில் நடந்துசென்ற பெண்ணிடம் செயினை பறித்த சம்பவம் பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# “முடிந்தால் கைது செய்யுங்கள்” – அமலாக்கத் துறைக்கு ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சவால்



ராஞ்சி , நவ.4–

முடிந்தால் தன்னை கைது செய்யுமாறு அமலாக்கத் துறைக்கு ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் சவால் விடுத்துள்ளார்.


ஜார்க்கண்ட்முதல்வராக இருக்கும் ஹேமந்த் சோரன், சுரங்க முறைகேட்டுடன் தொடர்புடைய பண மோசடியில் ஈடுபட்டதாக அமலாக்கத் துறை குற்றம்சாட்டியுள்ளது. இது தொடர்பான வழக்கில் ஹேமந்த் சோரனின் நெருங்கிய நண்பரான மிஷ்ராவையும், மேலும் இருவரையும் அமலாக்கத்துறை ஏற்கெனவே கைது செய்துள்ளது. அதோடு, மிஷ்ராவுக்குச் சொந்தமான இடங்கள் உள்பட மொத்தம் 19 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை மேற்கொண்டு பல்வேறு ஆவணங்களை கைப்பற்றியது. இதன் அடிப்படையில், ரூ.1,000 கோடி அளவுக்கு பண மோசடி நடந்திருப்பதாக அமலாக்கத் துறை குற்றம்சாட்டியுள்ளது.

இதைத் தொடர்ந்து தற்போது இந்த வழக்கில் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் முதல்வர் ஹேமந்த் சோரனிடம் விசாரணை நடத்த அமலாக்கத் துறை முடிவெடுத்து, அவருக்கு புதன்கிழமை சம்மன் அனுப்பியது. அதில், ராஞ்சியில் உள்ள அமலாக்கத் துறை தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெறும் விசாரணையில் நேரில் ஆஜராகவேண்டும்என்றும், விசாரணையின்போது பதில்கள் பதிவு செய்யப்படும் என்றும் அமலாக்கத் துறை தெரிவித்திருந்தது.

இந்நிலையில், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் ராஞ்சியில் உள்ள தனது வீட்டின் முன் திரண்ட ஆதரவாளர்கள் மத்தியில் பேசியது:“விசாரணைக்கு நேரில் ஆஜராகவேண்டும் என்று அமலாக்கத் துறை எனக்கு சம்மன் அனுப்பி உள்ளது. ஆனால், சத்தீஸ்கரில் எனக்கு நிகழ்ச்சி இருக்கிறது. நான் மிகப் பெரிய குற்றம் இழைத்துவிட்டதாக அமலாக்கத் துறை கருதுமானால் என்னை கைது செய்யட்டும். ஏன் என்னிடம் விசாரணை நடத்த வேண்டும்?

ராஞ்சியில் உள்ள அமலாக்கத் துறை அலுவலகத்தில்பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நான் அவர்களிடம் கேட்கிறேன், நீங்கள் ஏன் ஜார்க்கண்ட் மக்களைப் பார்த்து பயப்படுகிறீர்கள்? நமது மாநிலத்தில் சில குழுக்கள் இருக்கின்றன. ஆதிவாசிகள் தங்கள் சொந்த கால்களில் நிற்கக் கூடாது என அந்த குழுக்கள் எண்ணுகின்றன. ஜார்க்கண்ட் மாநிலம் அதன் மக்களால்தான் ஆளப்பட வேண்டும். வெளியாட்களால் அல்ல. வரும் மக்களவைத் தேர்தலிலும், சட்டமன்றத் தேர்தலிலும் பாஜக ஜார்க்கண்ட் மாநிலத்தில் துடைத்தெறியப்படும்” என்று அவர் பேசினார்.

# எலவனாசூர்கோட்டையில் மாற்று கட்சியினர் மாவட்டத் தலைவர் அருள் தலைமையில் பாஜக– வில் இணைந்தனர்



கள்ளக்குறிச்சி, நவ.04_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, எலவனாசூர்கோட்டையில், உளுந்தூர்பேட்டை கிழக்கு ஒன்றிய தலைவர் இளையராஜா தலைமையில், மாவட்டத் தலைவர் அருள் முன்னிலையில்,பெண்கள் உள்பட நூற்றுக்கும் மேற்பட்டோர் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தனர். கட்சியில் இணைந்தஅனைவருக்கும் மாவட்டத் தலைவர் சால்வை அணிவித்து வரவேற்றார், பின்னர் அனைவரும் ஊர்வலமாக சென்று பேருந்து நிலையம் அருகே பாரதிய ஜனதா கட்சியின் கொடியை மாவட்டத் தலைவர் ஏற்றி வைத்தார், பின்னர் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் விவசாய அணித்தலைவர் குருமூர்த்தி, கோவில் பராமரிப்பு மாவட்ட தலைவர் ராஜேந்திரன், ஊடகப் பிரிவு மாவட்ட தலைவர் மகேந்திரன், துணைத் தலைவர் முருகன், மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

Marlin Marbles
• Cements • Steels • Marbles • Granites • Tiles
99526 52396 / 94431 66264
Alangudi Main Road, Pudukkottai - 622 001.
E-mail : marlingranite12@gmail.com

# அரியலூர் மாவட்டம் ஆண்டிமடத்தில் உள்ளாட்சி தின கிராம சபை கூட்டம்

அரியலூர், நவ.4–

ஆண்டிமடத்தில் உள்ளாட்சிதினகிராமசபை கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒழுங்குமுறை விற்பனை கூட கட்டிடத்தில் நடைபெற்ற, உள்ளாட்சி தின கிராம சபை கூட்டத்துக்கு, ஊராட்சி மன்றத் தலைவர் நா. ஜெயராமன் தலைமை வகித்தார், ஊராட்சி செயலாளர் செல்வமணி தீர்மானங்களை படித்தார்.

ஆண்டிமடம் ஊராட்சி மன்ற வாக்காளர்கள், இளைஞர்கள் கிராம பிரமுகர்கள் மகளிர் உதவி குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்ற இக்கூட்டத்தில்,உள்ளாட்சி தின கிராம சபை கூட்டம் நடத்த ஆணை வெளியிட்ட தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தல். கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை கௌரவப்படுத்துதல், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகளை ஆண்டிமடம்ஊராட்சியில் செயல்படுத்துதல்,கலைஞர் வீடு வழங்கும் திட்ட கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

04.11.2022 ❖ வரலாறு

# குத்தாலத்தில் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம்



குத்தாலம், நவ.04:-

மயிலாடுதுறை மாவட்டம்,குத்தாலம் ஊராட்சி ஒன்றியக்குழுவின் சாதாரண கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக்குழு தலைவர் மகேந்திரன் தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி ஆணையர் சுமதி, ஒன்றியக் குழு துணைத்தலைவர் முருகப்பா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் 62 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நடைபெற்ற விவாதங்கள் வருமாறு:-

ராஜவள்ளி(திமுக):- திருவாலங்காடு மெயின் ரோட்டில் உள்ள டிரான்ஸ்பார்மர் மிகவும் பழுதடைந்துள்ளது.அதை உடனடியாக மாற்றித் தர வேண்டும் என்றார்.

வசந்தகோகிலம் (திமுக):- மேட்டுப்பாக்கத்தில் ஈமகிரியை மண்டபம் புதிதாக அமைத்து தர வேண்டும்.

சலீமாபானு(சுயேச்சை):- பெருமாள் கோவில்,மேலையூர் ஊராட்சிகளில் சாலைகளை சீரமைக்க வேண்டும்.

சிவகுமார் (பாமக):- கோனேரிராஜபுரத்தில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களை கழிப்பறை வசதியுடன் கட்ட வேண்டும். கிராம சபை கூட்டத்தில் அரசு அதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை என குற்றம் சாட்டினர்.

வினோத்(பாஜக):- கள்ளிக்காட்டில் உள்ள பள்ளி கட்டிடத்தை இடிக்காமல் மறுஆய்வு செய்து சீரமைப்பு பணிகள் செய்தால் போதும் என்றும், ஒன்றிய குழு கூட்டங்களுக்கு மின்சாரம்,சுகாதாரத்துறை, வருவாய்த்துறை உள்ளிட்ட துறையிலிருந்து அரசு அலுவலர்கள் வருவதே இல்லை பொதுமக்களின் குறைகளை அவர்களுக்கு எவ்வாறு கொண்டு செல்வது என்றார்.

நெடுஞ்செழியன் (அதிமுக):- மழைக்காலங்களில் கடமங்குடி,இடைக்கியம்,கொத்தங்குடி ஆகிய கிராமங்கள் ஆற்றுப்பகுதியின் ஓரத்தில் உள்ளதால் மழை நீரானது உள்ளே புகுந்து விடும். எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

திவ்யா(திமுக): - கொலையூரிலிருந்து கோமல் செல்வதற்கு இரண்டு கிலோமீட்டர் தூரம் சுற்றி வரவேண்டிய நிலை உள்ளது. எனவே வீரசோழன் ஆற்றில் புதிய பாலம் ஒன்று அமைத்து தர வேண்டும்.

ராஜா(திமுக):- சேத்திரபாலபுரம் ஊராட்சி ராமாமிர்தம் நகரில் புதிய சமுதாயக்கூடம் ஒன்று அமைக்கவேண்டும்.

தலைவர்:- அனைத்துஉறுப்பினர்களின் கோரிக்கைகளும் பாரபட்சமின்றி ஏற்கப்பட்டு நிதி நிலைமைக்கு ஏற்ப படிப்படியாக நிறைவேற்றப்படும் என்றார்.

இக்கூட்டத்தில், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி பொறியாளர்கள், பணி மேற்பார்வையாளர்கள், அலுவலக பணியாளர்கள், அரசு அலுவலர்கள் என பலர் கலந்துக்கொண்டனர்.








இன்று கொல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் ஸ்டேடியத்தில் ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்ளும் சென்னையின் எப் சி அணி கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் இடைவெளிக்குப் பிறகு இந்த போட்டியில் மோத உள்ளது. இது குறித்து சென்னையின் எப் சி அணியின் பயிற்சியாளர் கூறுகையில் இந்த போட்டி சவாலான போட்டி ஈஸ்ட் பெங்கால் அணியை சொந்த மண்ணில் சந்திப்பது கடினமான விசயம், ஆனாலும் எங்கள் வீரர்கள் கடினமாக போராடி வெற்றி பெறுவோம் ,இந்த இடை வெளி எங்களுக்கு புதிய உத் வேகத்தை கொடுத்து உள்ளது என்றார்

# புதிய தேசிய கல்விக் கொள்கையைத் திரும்பப்பெறக்கோரி ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தர்ணா



புதுக்கோட்டை, நவ.4-

கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களைப் பாதிக்கும் புதிய தேசிய கல்விக் கொள்கை 2020-ஐ திரும்பப்பெற வலியுறுத்தி தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் புதுக்கோட்டையில் தர்ணா நடைபெற்றது.

புதுக்கோட்டை அண்ணாசிலை அருகே நடைபெற்ற போராட்டத்திற்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டத் தலைவர் சி.சோமசுந்தரம் தலைமை வகித்தார், கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் த.ஜீவன்ராஜ், மாநில செயற்குழு உறுப்பினர் சே.பேச்சியம்மாள், பொதுக்குழு உறுப்பினர்கள் பழ.தேவேந்திரன், த.ரமேஷ் மற்றும் மாவட்டப் பொறுப்பாளர்கள் பேசினர், தோழமைச் சங்க நிர்வாகிகள் இரா.ரெங்கசாமி, மா.குமரேசன், அ.சந்திரபோஸ், து.சந்திரசேகரன், இராம.வள்ளியம்மை ஆகியோர் போராட்டத்தை ஆதரித்துப் பேசினர், தர்ணா போராட்டத்தில் கலந்துகொண்டு சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ச.மயில் நிறைவுரையாற்றினார், முடிவில் மாவட்டப் பொருளாளர் வே.கீதா நன்றி கூறினார். பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும், 50 ஆண்டுகளாகப் பெற்றுவந்த உயர்கல்விக்கான ஊக்க உயர்வை மீண்டும் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 30 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# சீர்காழி பகுதியில் சாலையில் மழைநீர் தேங்கியதால் பொதுமக்கள் கடும் அவதி



சீர்காழி, நவ. 4 -

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை கடந்த 29ஆம் தேதி தொடங்கி தீவிரமடைந்து வருகிறது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் பரவலான கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி பகுதியில் இரவு முதல் விடிய விடிய 22 சென்டிமீட்டர் கொட்டி தீர்த்த கனமழையால் சீர்காழி நகர் பகுதியில் உள்ள வி என் பி நகர், வ உ சி தெரு, பழைய பஸ் நிலையம், புதிய பஸ் நிலையம், இந்திரா நகர், திருவள்ளுவர் நகர், வசந்தம் நகர், பாலாஜி நகர், பாலசுப்பிரமணியம் நகர், சுபஸ்ரீ கார்டன், ஈசானிய தெரு, சன் சிட்டி நகர் உள்ளிட்ட பல்வேறு சாலைகளில் மழைநீர் தேங்கியதால் குடியிருப்பு வாசிகள் மற்றும் வாகன ஓட்டிகள் கடும் இன்னலுக்கு உள்ளாகினர்.

மேலும் பல்வேறு இடங்களில் மரங்கள் சாய்ந்து விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதேபோல் வ உ சி தெற்கு தெருவை சேர்ந்த குஞ்சு மகன் ரவி (வயது 52) என்பவரின் கூரை வீடு கனமழையால் இடிந்து விழுந்தது. இதில் வீட்டிலிருந்த பொருள்கள் சேதம் அடைந்தன. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதை போல் சீர்காழி அருகே எடகுடி ஊராட்சிக்கு உட்பட்ட கரைமேடு,கீழ கரைமேடு, பொட்டவெளி, கீழவெளி, சாந்தபுத்தூர் உள்ளிட்ட பகுதியில் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில் மழைநீர் சூழ்ந்துள்ளதால் குடியிருப்பு வாசிகள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத நிலை இருந்து வருகிறது. மேலும் மேற்கண்ட கிராமங்களில் சாலைகளில் மழை நீர் வழிந்து ஓடுவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இதுபோல் மேற்கண்ட பகுதியில் உள்ள நடவு மற்றும் நேரடி விதைப்பு சம்பா நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் வேதனை அடைந்து வருகின்றனர். இதைப்போல் கதிராமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட சொல்லு முத்து குமரன் நகர், வேலவன் நகர் உள்ளிட்ட நகரில் உள்ள சாலைகளில் மழை நீர் தேங்கியுள்ளதால் நகர்ப்புற வாசிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதேபோல் சீர்காழி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொண்டல், திட்டை, தில்லைவிடங்கன், கதிராமங்கலம், விளந்திட சமுத்திரம், அகனி, ஆதமங்கலம், பெருமங்கலம் உள்ளிட்ட ஊராட்சியில் தாழ்வான பகுதிகளில் நடவு செய்யப்பட்ட சம்பா நெற்பயிர்கள் மழை நீரில் மூழ்கி வருகிறது. மேலும் தொடர்ந்து மழை பெய்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர். இதை போல் திருமுல்லைவாசல், தொடுவாய் உள்ளிட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்கள் கடல் சீற்றம் காரணமாக கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் தங்களுடைய விசைப்படகுகள், பைபர் படகுகள், கட்டு மரங்கள் உள்ளிட்டவைகளை பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி வைத்துள்ளனர். மேலும் சுனாமி குடியிருப்புகளில் கடல் நீர் மற்றும் மழை நீர் சூழ்ந்துள்ளதால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

# நீட் தேர்வில் வெற்றி பெற்று மருத்துவக்கல்லூரியில் சேர்ந்த மாணவியை பேரிட்டிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் சால்வை அணிவித்து வாழ்த்தினார்



*ஊத்துக்கோட்டை, நவ4–*

*திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம்,பேரிட்டிவாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த முனிரத்தினம்–சுஜாதா தம்பதியரின் மகள் லாவண்யா போந்தவாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் படித்தார். பின்னர்,நீட் தேர்வில் கலந்துகொண்டு வெற்றி பெற்றார். எனவே,கிருஷ்ணகிரி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார்.*

*இந்நிலையில், நேற்று பேரிட்டிவாக்கம் ஊராட்சிமன்றத்தலைவர் வழக்கறிஞர் ஆ.தில்லைகுமார் தலைமையில் துணைத் தலைவர் எ.முனுசாமி,ஊராட்சி செயலர் பி.தனசேகரன் வார்டு உறுப்பினர்கள் எ.சீனிவாசன்,எஸ். கோவிந்தம்மாள்,எம். புனிதாமகேஷ்,ஜெ. லலிதாஜெயரங்கன்,என். சுஜாதாநாகராஜ் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த ராமு,அன்பு,சுதாகர்,மதன் உள்ளிட்ட ஏராளமானோர் நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவிக்கு சால்வை,மாலை அணிவித்துஇனிப்புவழங்கி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.*











# சென்னையில் மகளின் திருமண செலவுக்காக ஐம்பொன் சிலைகளை திருடிய தந்தை கைது



சென்னை, நவ,4

சென்னை மணலி சின்ன மாத்தூர் சி.பி.சி.எல் நகரில் உள்ள அருள்மிகு ஸ்ரீ வேணுகோபால் சாமி திருக்கோயில் உள்ளது. சுமார் 300 ஆண்டுகள் பழமையான இந்தக் கோவிலில் 2 அடி உயரத்தில் ஐம்பொன்னாளான பெருமாள், ஸ்ரீதேவி,பூதேவி ஆகிய மூன்று சிலைகள் இருந்தன.

வைக்காடு கிராம நிர்வாகிகள் பராமரித்து வரும் இந்த கோயிலில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் ஏராளமானோர் வழிபடுவது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று காலை இந்த கோவிலின் இரும்பு கேட் உடைந்து கோவில் கதவு திறந்து கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்த பொதுமக்கள் உடனடியாக மணலி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர் .தகவலின்பேரில் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மணலி காவல் ஆய்வாளர் சுந்தர் தலைமையில் போலீசார் கோவிலுக்கு வந்த போலீசார் கோவிலை சோதனையிட்டபோது உள்ளே வைக்கப்பட்டிருந்த 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த 20.கிலோ எடையுள்ள ஸ்ரீதேவி,பூதேவி ஐம்பொன் சிலைகள் இரண்டு திருடு போனது தெரியவந்தது.

இதுகுறித்து கிராம தலைவர் வெங்கடேசன் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து கோவிலின் அருகே பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமரா காட்சி பதிவுகளை ஆய்வு செய்த போது மர்ம நபர் ஒருவர் சிலைகளை கொள்ளை அடித்து சென்றது தெரிய வந்தது

இதையடுத்து அதே பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய அந்தோணி என்ற யுவராஜ் போலீசார் கைது செய்து கிடுக்கிப்பிடி விசாரணை செய்த போது தனது மகள் திருமணம் வரும் 7 தேதி நடைபெறுவதால் இதற்காக பணம் தேவைப்பட்டதால் அருகில் இருந்த கோவிலில் திருடிய இரண்டு ஐம்பொன் சிலைகளையும் அதே பகுதியில் உள்ள CPCL பாலிடெக்னிக் கல்லூரி பின்புறத்தில் உள்ள மயானத்தில் அருகே உள்ள குட்டையில் மறைத்து வைத்திருப்பதாக தெரிவித்தார்.

போலீசார் அங்கு சென்று அந்த இரண்டு ஐம்பொன் சிலைகளையும் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்



**திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் கலாதரன் வடகிழக்கு பருவ மழையால் பாதிக்கப்பட்ட 10-வது வார்டு பகுதிகளை பார்வையிட்டு மழை நீர் விரைவாக வெளியேற தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அப்போது 10-வது வார்டு பேரூராட்சி உறுப்பினரும், நியமனக்குழு உறுப்பினருமான டி.கண்ணதாசன், இளநிலை உதவியாளர் யுவராஜ்,சுகாதார மேற்பார்வையாளர் ஹரிபாபு, ஆரணி பேரூர் திமுக துணைச் செயலாளர் கோபிநாத்,10-வது வார்டு பகுதி சபா குழு உறுப்பினர்கள் நிலவழகன், வார்டு அவை தலைவர் ஈசாஜாவித்,வார்டு பிரதிநிதி தமிழ்செல்வி,இலக்கிய அணி துணைச் செயலாளர் ரெனால்ட் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.**

*வடகிழக்கு பருவ மழையையொட்டி*

# முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம்

## அமைச்சர் மெய்யநாதன் பங்கேற்பு



மயிலாடுதுறை, நவ.04:-

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவ மழையையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் கடந்த மூன்று மாத காலமாக இங்கு மழை இல்லாவிட்டாலும் மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட உபரி நீரால் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஏழு கிராமங்கள் பாதிக்கப்பட்ட பொழுது அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும், போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்த அனைத்து துறையை சார்ந்த அலுவலர்களுக்கும் முதலில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கிய நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செவ்வாய்க்கிழமை மாவட்ட ஆட்சியர்களுக்கு தகுந்த ஆலோசனைகளையும், கருத்துக்களையும் வழங்கினார். முதல்வர் சொன்னதை போல மயிலாடுதுறை மாவட்டத்திற்கு பொது தொலைபேசி எண் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். நோய்கள் பரவாமல் தடுக்க வேண்டும், பேரிடர் மேலாண்மை அலுவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். மின் விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டும். சென்னையில் கனமழை பெய்தாலும் தமிழ்நாடு முதலமைச்சர் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் இன்று சென்னை மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். முதலமைச்சர் எடுத்த துரித நடவடிக்கையால், பொதுமக்களும், சமூக ஆர்வலர்களும், தன்னார்வலர்களும் தமிழக அரசை பாராட்டி வருகின்றனர்.

அதுபோல மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆங்காங்கே மழை பெய்து தண்ணீர் சாலைகளில் தேங்கி இருந்தால் அதனை உடனடியாக அகற்ற வேண்டும். கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது, இந்த அறை 24 மணி நேரமும் செயல்படும். நம்முடைய கவனத்திற்கு வரும் பிரச்சனைகளை உடனடியாக நிவர்த்தி செய்து தர வேண்டும். தொலைபேசி மூலமாகவோ. வாட்ஸ்அப் வழியாகவோ வரக்கூடிய கோரிக்கைகளை உடனடியாக நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியது போல எந்த பகுதியிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் உடனுக்குடன் சரிசெய்து கொடுக்க வேண்டும். இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் செய்தியாளர்களிடம் பேசியதாவது:

தமிழக முதலமைச்சர் முக ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி வடகிழக்கு பருவ மழையை எதிர்கொள்வதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட உயர் தலைமையில் நாடாளுமன்ற அதிகாரிகள் ஆகியோ கலந்துகொண்ட ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. கட்டுப்பாட்டு அறை, பொது தொலைபேசி எண் பொதுமக்களுக்கு வழங்கப்பட உள்ளது. பாதிப்பை மீட்டெடுக்கவும். நோய் தடுப்பு பணியை மேற்கொள்ளவும், மின் பழுதை போக்கவும், பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்ன கருத்துக்களை கவனத்தில் கொள்ளப்பட்டு பாதிப்புகள் ஏற்பட்டால் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படும். கடந்த காலங்களில் எந்தெந்த பகுதியில் பாதிப்பு ஏற்பட்டதோ அந்த பகுதியில் சிறப்பு கவனம் செலுத்தப்படும். இவ்வாறு அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா, மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர். செ.இராமலிங்கம், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம். முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், மாவட்ட வருவாய் அலுவலர் சோ. முருகதாஸ், மயிலாடுதுறை நகர் மன்றத் தலைவர் என். செல்வராஜ். மயிலாடுதுறை ஒன்றியக்குழுத் தலைவலர் காமாட்சி மூர்த்தி, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர் வ.யுரேகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஜெ.பாலாஜி. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) கனகராஜ், நீர்வளத்துறை செயற்பொறியாளர் வே.சண்முகம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (கட்டடம்) ரவிக்குமார், மயிலாடுதுறை காவல் துணை கண்காணிப்பாளர் வசந்தராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரேணுகா மற்றும் அனைத்து அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மாநிலஅளவில் நடைபெற்ற சதுரங்க போட்டியில் மௌண்ட் சீயோன் சர்வதேசப்பள்ளி மாணவன் சாதனை

புதுக்கோட்டை,நவ.4-

மாநிலஅளவிலானசதுரங்கபோட்டிகள்தஞ்சாவூரில் உள்ளசிவசாமி பாலவித்யாலயாமெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில்நடத்தப்பட்டது. இப்போட்டியில் மாநிலஅளவில் 350-க்கும் மேற்பட்ட பள்ளிமாணவர்கள் கலந்து கொண்டனர். இந்தபோட்டியில் புதுக்கோட்டைமாவட்டம் லேனாவிலக்கில் உள்ள மௌண்ட் சீயோன் சர்வதேசப் பள்ளியில்எட்டாம் வகுப்புபயிலும் மாணவன் எஸ். ஆரிஸ் இம்ரான், செஸ்போட்டியில் கலந்து கொண்டு மாநிலஅளவில் முதலிடம் பெற்றார். மேலும் இந்தமாணவன் புதுக்கோட்டை மாவட்ட அளவிலும் நடைபெற்ற சதுரங்க போட்டியிலும் கலந்துகொண்டு முதலிடம் பெற்றார்.

வெற்றிபெற்ற பள்ளி மாணவனை மௌண்ட் சீயோன் பள்ளியின் தலைவர் ஜோனத்தன் ஜெயபரதன், துணைத்தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன் ஆகியோர் பாராட்டினர், பள்ளி முதல்வர் ஜலஜா குமாரி மற்றும் ஆசிரியர்கள் வெற்றிபெற்றமாணவனுக்குவாழ்த்துக்களை தெரிவித்தனர்.




# உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகம் புறநகர் பேருந்து நிலையம் அமைக்க இடம் தேர்வு தொடர்பாக கலெக்டர் ஆய்வு

கள்ளக்குறிச்சி, நவ,04_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன்குமார் திடீர் ஆய்வு மேற்கொண்டார். கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு அலுவலகங்களின் செயல்பாடுகள் மற்றும்பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் குறித்து அவ்வப்போது மாவட்ட ஆட்சித்தலைவரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றையதினம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய்த்துறை சம்பந்தப்பட்ட கோப்புகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் வருவாய்த்துறை தொடர்பான சான்றுகள்மற்றும் நிலம் அளவு தொடர்பான மனுக்கள்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்துமாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு செய்து, நிலுவையில் உள்ள நில அளவு மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட நில அளவையர் கிராம நிர்வாக அலுவலர் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகம் புதியதாக கட்டுவதற்கும், புறநகர் பேருந்துநிலையம் அமைப்பதற்கும் இடம் தேர்வு செய்வது தொடர்பாக உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, எலவனாசூர் கோட்டையில் இருந்து திருக்கோவிலூர் செல்லும் சாலையில் பிடாகம் கிராமத்தில் அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, பென்சிங் கம்பிவேலி அமைப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் புலத்தணிக்கை ஆய்வு மேற்கொண்டு, அரசுக்குச் சொந்தமான அரசு நிலங்களை தனிநபர்கள், ஆக்கிரமிப்பு மேற்கொள்ளாமல் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

இவ்வாய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் விஜய்பாபு, திருக்கோவிலூர்வருவாய் கோட்டாட்சியர் யோகஜோதி, உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் மணிமேகலை, உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையர் சரவணன், உளுந்தூர்பேட்டை நகர்மன்றத் தலைவர் திருநாவுக்கரசு, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





▶ சென்னை தலைமைச் செயலகத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, பொது விநியோகத் திட்ட அங்காடிகளை ஆய்வு செய்யும் அலுவலர்களுக்கான செயலினை அறிமுகம் செய்தார். உடன் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அரசு முதன்மை செயலாளர் ராதாகிருஷ்ணன், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் ராஜாராமன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் சங்கர் ஆகியோர் உள்ளனர்.

# கந்தர்வகோட்டை அதிமுக ஓபிஎஸ் அணியினர் தலைவர்கள் சிலைக்கு மரியாதை



கந்தர்வக்கோட்டை, நவ.4-

கந்தர்வகோட்டை அதிமுகஓபிஎஸ்அணியினர் புதிய நிர்வாகிகள் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தலைவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்முன்னாள்முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சார்பில் அறிவிக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் பட்டியலில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், மேற்கு ஒன்றிய செயலாளராக மணிகண்டன், தெற்கு ஒன்றிய செயலாளராக நெப்புகை ஊராட்சி மன்ற தலைவர் முள்ளிக்காப்பட்டி ஆறுமுகம், வடக்கு ஒன்றிய செயலாளராக முரட்டுசோலக்கம்பட்டி தொழிலதிபர் சச்சிதானந்தம் ஆகியோர் அறிவிக்கப்பட்டதை அடுத்து கந்தர்வகோட்டை பேருந்து நிலையத்தில் பட்டாசுகள் வெடித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

மேலும் பேருந்து நிலையத்திலிருந்து பேரணியாக காந்தி சிலை வரை சென்று தலைவர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட எம் ஜி ஆர் மன்ற செயலாளர் சரவணன், மாவட்டத் துணைச் செயலாளர் அழகர்சாமி, மாவட்ட அம்மா பேரவை பன்னீர்செல்வம், மாவட்ட பொருளாளர் அண்ணாதுரை, பொதுக்குழு உறுப்பினர் தாமரைச்செல்வன், தொகுதி அமைப்பாளர் தமிழரசி, துணை அமைப்பாளர்கள் நம்புரான் பட்டி மதியழகன், காந்தி மற்றும்மூத்த முன்னோடி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.






▶ பெருநகர சென்னை மாநகராட்சி, திரு வி க நகர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு மற்றும் நிவாரண பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நேற்று அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் மண்டல அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மேயர் பிரியா, எம் எல் ஏ தாயகம் கவி, மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் திவ்யதர்ஷினி, ரஞ்சித் சிங், மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.







▶ புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் திருக்கட்டளை ஊராட்சியில் சுந்தரமாகாளியம்மன் கோவில் அருகில் உள்ளகுடியிருப்பு பகுதிக்கு செல்வதற்கு சாலை வசதி இல்லாமல் இருந்து வந்தது. இந்த பகுதிக்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஜெயபால் தலைமையில் துணைத் தலைவர் ராமச்சந்திரன் முன்னிலையில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் 100 நாள் பணியாளர்கள் எந்திரத்தின் உதவியுடன் அடர்ந்த முற் புதர்களை . அகற்றி சாலை வசதி ஏற்படுத்தி கொடுத்தனர், இதற்கு அப்பகுதி பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

## பேரணியில் திடீர் துப்பாக்கி சூடு

# பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் காயம்

வசிராபாத் , நவ.4-

பாகிஸ்தானின் வசிராபாத்தில் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் தலைமையில் அரசுக்கு எதிராக பேரணி நடத்தப்பட்டது. இந்த பேரணியின்போது இம்ரான் கான் திறந்த வாகனத்தில் சென்று கொண்டிருந்தார்.



சபராலி கான் சவுக் என்ற இடத்தில் பேரணி சென்றபோது அவர்களை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் இம்ரான்கானின் காலில் காயம் ஏற்பட்டது. அவரது கட்சியினர் (பிடிஐ) சிலரும் காயமடைந்தனர்.

துப்பாக்கி சூடு சம்பவத்தைத் தொடர்ந்து இம்ரான் கான் பாதுகாப்பாக குண்டு துளைக்காத வாகனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர்.



▶ திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு ஒழுங்குமுறை வேளாண் விற்பனைகூடத்தில்செய்யாறுசட்டமன்றஉறுப்பினர் ஒ.ஜோதி திடீர் ஆய்வு மேற்கொண்டார். விவசாயிகளின் குறைகளை கேட்டு அறிந்து விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். வெம்பாக்கம் ஒன்றிய குழு தலைவர் மாமண்டூர் டி.ராஜி, நகர மன்ற உறுப்பினர் ரமேஷ், செய்யாறு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஞானவேல், அனக்காவூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ரவிக்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் மங்கலம் பாபு, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் ராம் ரவி மாவட்ட பிரதிநிதி பார்த்திபன் மற்றும் கழக நிர்வாகிகள், விவசாயிகள், சுமை தூக்கும் தொழிலாளர்கள் உடன் இருந்தனர்.

# ஆவுடையார்கோவில் அருகே சுற்றுலா தளத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தனி நபர்கள் ஆக்கிரமிப்பு

## வட்டாட்சியர் முன்னிலையில் அகற்றம்



ஆவுடையார்கோவில், நவ.4-

சுற்றுலா தளத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்ததால் அதை வட்டாட்சியர் முன்னிலையில் அகற்றப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகாவிற்கு உட்பட்ட முத்துக்குடா கிராமத்தின் சுற்றுலா தளம் வர இருப்பதால் அந்த சுற்றுலா தளத்திற்கு செல்லும் வழியில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து கல்லு கால்கள் அமைத்து முள் வேலிகள் அமைத்து இருந்தனர், அந்த பகுதிக்கு நேற்று ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் வில்லியம் மோசஸ் தலைமையில் வருவாய் துறையினர் மற்றும் மீமிசல் காவல் துறையினர் முன்னிலையில் ஜேசிபி இயந்திரம் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றி சுற்றுலா தளத்திற்கு செல்லும் சாலையை ஆக்கிரமிப்பு செய்த கள்ளுக்கால்கள் முள் வேலிகள் அனைத்தையும் அகற்றினர், அந்தப் பகுதியில் உள்ள 15 ஏக்கருக்கும் மேற்பட்ட ஆக்கிரமிப்புகளை ஜேசிபி இயந்திரம் மூலம் அகற்றினர்.

# இந்தியாவை வீழ்த்தினால் உங்கள் நாட்டின் மருமகள் ஆவேன் ஜிம்பாப்வே வீரர்களை உசுப்பேற்றிய பாக்., நடிகை

டெல்லி , நவ,04_

டி20 உலகக் கோப்பையில் இந்தியாவை வீழ்த்தினால் ஜிம்பாப்வே பையனை திருமணம் செய்து கொள்வேன் என பாகிஸ்தானை சேர்ந்த நடிகை சேஹர் ஷின்வாரி தெரிவித்துள்ளார். டி20 உலகக்கோப்பையில் கடந்த வாரம் நடைபெற்ற சூப்பர் 12 சுற்று ஆட்டம் ஒன்றில் வலுவான பாகிஸ்தான் அணி, ஜிம்பாப்வே அணியிடம் ஒரு ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்நிலையில், பரபரப்பாக பேசப்பட்டு வரும் இந்தியா-ஜிம்பாப்வே டி20 போட்டி வரும் 6ம் தேதி நடைபெற இருக்கிறது. இதுகுறித்து பாகிஸ்தான் நடிகை சேஹர் ஷின்வாரி பரபரப்பாக டுவீட் ஒன்றை பதிவிட்டுள்ளார். அதில், ஜிம்பாப்வே அணி இந்தியாவை தோற்கடித்தால், ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து கொள்வேன் என்று சேஹர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.



இவரது பதிவை 850க்கும் மேற்பட்ட பயனர்கள் லைக் செய்துள்ளனர். மேலும், 49 முறை ரீடுவீட் செய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தான் நடிகை இந்தியாவிற்கு எதிராக டுவீட் செய்வது இது முதல்முறை அல்ல. கடந்த வாரம் வங்காள தேசத்திற்கு எதிரான இந்தியாவின் போட்டியின்போது, "இந்தியா தோற்க வேண்டும், இந்தியா தோற்க வேண்டும்" என்று தொடர்ந்து ட்வீட் செய்து வந்தார். இதனால், இந்திய ரசிகர்கள் சேஹர் ஷிவாரியை கலாய்த்து பதில் பதிவிட்டு வருகின்றனர். அதில் சில நெட்டிசன்கள், "அப்படியானால், உங்கள் முழு வாழ்க்கையையும் நீங்கள் எப்படி தனியாக வாழ போகிறீர்கள்.." என்றும், "பங்களாதேஷை இந்தியா தோற்கடித்தால் உங்கள் டுவிட்டர் கணக்கை நீக்க வேண்டும்.." என்றும் பதிவிட்டுள்ளனர்.

# புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் கல்லூரியில் தூய்மை இந்தியா திட்டம் 2.0

புதுக்கோட்டை,நவ.4-

புதுக்கோட்டை மாவட்டம் லெணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இனிதே செயல்பட்டு வரும் நாட்டு நலப் பணி திட்ட இயக்கம் இணைந்து தூய்மை இந்தியா 2.0 திட்டத்தை இனிதே தொடங்கி செயல்படுத்தியது. இப்பணியின் தொடக்கத்தில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் ஆர்வலர்கள் காலை 11மணிக்கு கல்லூரி வளாகம் முழுவதும் இருந்த நெகிழிகளை அகற்றி நெகிழிகள் அற்ற கல்லூரி வளாகமாக மாற்றினார்கள்.

பின்பு மதியம் 2 மணியளவில் கல்லூரிக்கு அருகில் உள்ள திருமயம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு சென்று அப்பள்ளியின் வளாகத்தையும் அங்கு இருந்த நெகிழிகளையும் அகற்றி நெகிழிகள் இல்லா இந்தியா உருவாக மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கைகோர்த்தனர், இதன் மூலம் மக்காத குப்பையாகிய நாங்கள் சேகரித்த நெகிழிகள் அனைத்தையும் எங்களது ஊராட்சியில் ஒப்படைத்து மறுசுழற்சிக்கு வழிவகை செய்துள்ளோம்.




# முதியோருக்கான பயணச் சலுகையை மீண்டும் வழங்குக – ஓய்வூதியர்கள் கோரிக்கை

புதுக்கோட்டை, நவ.4-

ரயில் பயணத்தில் 60 வயது நிரம்பிய ஓய்வூதியர்களுக்கான பயணச் சலுகையை மீண்டும் நடைமுறைப்படுத்த வலியுறுத்தி ஓய்வூதியர்கள் சங்கம் சார்பில் புதுக்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை திலகர்திடலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க மாவட்டத் தலைவர் மு.முத்தையா தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டச் செயலாளர் ம.வெள்ளைச்சாமி மற்றும் நிர்வாகிகள் என்.ராமச்சந்திரன், அ. மணவாளன், எம்.ஏ.ரகுமான் உள்ளிட்டோர் பேசினர்.



புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்துசெய்துவிட்டு பழைய ஓய்வூதிய முறையே தொடர வேண்டும், 70 வயது நிரம்பிய ஓய்வூதியர்களுக்கு 10 வீடுக்காடு ஊதிய உயர்வு வழங்க வேண்டும், ரயில் பயணத்தில் 60வயது நிரம்பிய ஓய்வூதியர்களுக்கான பயணச் சலுகையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும், மருத்துவக் காப்பீட்டில் உள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும், குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.12 ஆயிரம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.




Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# திருநெல்வேலி ராஜவல்லிபுரத்தில் திருட்டு சிலைகள் கைப்பற்றப்பட்டது

## குற்றவாளிகளை கைது செய்து போலீசார் அதிரடி



திருநெல்வேலி , நவ,04_

திருநெல்வேலி சரக்கத்தில் சிலை திருட்டு தொடர்பான குற்றங்கள் நடைபெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் சென்னை சிலை திருட்டு தடுப்பு பிரிவு காவல் இயக்குனர் ஜெயந்தி முரளி உத்தரவின் படி சிலை திருட்டு தடுப்பு பிரிவு காவல் துறை தலைவர் தினகரன் வழிகாட்டுதல்படி சிலை திருட்டு தடுப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் ரவி மேற்பார்வையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாலமுருகன் தலைமையில் காவல் ஆய்வாளர் உதவி ஆய்வாளர்கள் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் திருநெல்வேலி ராஜவல்லிபுரத்தில் வசிக்கும் செல்ல பாண்டியன் மகன் நடராஜன் என்பவரின் வீட்டில் தொன்மையான சிலைகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக திருநெல்வேலி சரக காவல் ஆய்வாளருக்கு கிடைக்கப்பெற்ற ரகசிய தகவலின் பேரில் காவல் ஆய்வாளர் என்.இளங்கோ உதவி ஆய்வாளர்கள் சகாயசெல்வின், சிபின்ராஜ்மோன், நாகேந்திரன் மற்றும் காவலர்கள் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டது.

மேற்படி ரகசிய தகவலை கூடுதல் தலைமை குற்றவியல் நீதிமன்ற நடுவருக்கு தெரியப்படுத்திய காவல் ஆய்வாளர் நீதிமன்ற முன் அனுமதியுடன் ராஜவல்லிபுரம் கிராம நிர்வாக அலுவலர் சுப்பிரமணியம் மற்றும் கிராம உதவியாளர் சொள்ளமுத்து முன்னிலையில் நடராஜன் வீட்டை சோதனை செய்தபோது அவரின் வீட்டில் விநாயகர் சிலை உள்பட பல உலோக சிலைகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி சிலைகளை வைத்திருப்பதற்கான எந்த ஒரு நம்பதகுந்த ஆவணங்களும் இல்லாமல் இருந்ததால் சிலைகள் தமிழகத்தில் உள்ள ஏதேனும் ஒரு கோயிலுக்கு சொந்தமானதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது.

சிலைகள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக சென்னை சிலை திருட்டு தடுப்பு பிரிவில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு சிலைகள் கும்பகோணம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட உள்ளது. இந்த சிலைகள் எந்த கோயிலுக்கு சொந்தமானது என்பது வழக்கின் புலன்விசாரணையின் முடிவில் தெரிய வரும். சிலைகளை மீட்ட திருநெல்வேலி சரக சிலை திருட்டு தடுப்பு பிரிவு போலீஸாரை காவல்துறை தலைமை இயக்குனர் சைலேந்திரபாபு வெகுவாக பாராட்டினார்கள்.



புதுவை மாநில காரைக்கால் மாவட்ட ஆட்சியர் எல். முகமது மன்சூர் தலைமையில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மழையால் பாதிப்புகள் ஏற்படும் தாழ்வான பகுதிகள் மற்றும் வாய்க்கால்களை பார்வையிட்டார்கள். மேலும் பட்டேல் நகர். பாரதிதாசன் நகர். ஜிப்மர் குடியிருப்புக்கு முன்புள்ள வாய்க்காள். வானொலி நிலை குடியிருப்புகள், சுனாமி நகர் குடியிருப்பு, எம். எம்.ஜி நகர் பார்க், பெரிய வாய்க்கால், அண்ணுசாமி பிள்ளை வாய்க்கால், போன்ற இடங்களை பார்வையிட்டு தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்காத வண்ணம் சரி செய்யும் படியும் வாய்க்கால்களை உடனடியாக தூர் வாரி தண்ணீர் தேங்காமல் செல்லும் வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை ஆட்சியார் கேட்டுக்கொண்டார்கள். மேலும் எம். எம். ஜி. நகர் பார்க்கில் தேங்கி இருக்கும் தண்ணீரை உடனடியாக அகற்ற ஏற்பாடு செய்யும்படியும் பொதுப்பணித்துறை மற்றும் நகராட்சி அதிகாரிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார்கள். இந்நிகழ்வில் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) ஆதர்ஷ். நகராட்சி ஆணையர் செந்தில்நாதன் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் வீரச்செல்வம் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் இருந்தனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் ஒன்றியம் கண்ணனூர் ஊராட்சியில் பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் அங்கன்வாடி மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், நேரில் சென்று பார்வையிட்டு குழந்தைகளுடன் கலந்துரையாடி, குழந்தைகளுக்கு கற்பிக்கும் முறை குறித்து ஆசிரியர்களிடம் கேட்டறிந்தார்.

# மயிலாடுதுறையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டம்




மயிலாடுதுறை ,நவ,04_

மயிலாடுதுறையில் மயிலாடுதுறை மாவட்ட திமுக பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் கே.ஜி சீனிவாசன் தலைமையில் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நல விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், தலைமை தேர்தல் பணிக்குழு செயலாளர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், மாநிலக் கொள்கை பரப்பு துணை செயலாளர் அன்பழகன், மாநில விவசாய அணி இணை செயலாளர் அருள்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் பேசியபோது பாஜகவை வீழ்த்தக்கூடிய மாபெரும் சக்தியாக தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் உருவெடுத்துள்ளார். திராவிட மாடல் என்ற தத்துவத்தின் அடிப்படையில் தமிழகத்தில் சிறந்த ஆட்சியை வழங்கி வருகிறார் என்றார்.

மேலும் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் முன்னால் சட்டமன்றஉறுப்பினர்கள், சத்தியசீலன், ஜெக. வீரபாண்டியன், பன்னீர்செல்வம், எம். எம்.சித்திக், மாவட்ட திமுகபொறுப்பாளர்கள் ஞானவேலன் கண்ணகி பன்னீர், செல்வமணி, மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில்நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் திமுக கழக பொறுப்பாளர்கள் உள்ளிட்டஏராளமானோர் கலந்து கொண்டனர். தொடர்ந்துஇக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் நகர கழக செயலாளரும், நகர் மன்ற தலைவருமான செல்வராஜ் நன்றி கூறினார்.

# கள்ளக்குறிச்சியில் இந்தியன் வங்கியின் சார்பில் கிராம விழிப்புணர்வு கூட்டம்




கள்ளக்குறிச்சி, நவ,04_

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கடத்தூர் கிராமத்தில் மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் வங்கியின் சார்பில், அனைத்து வங்கியாளர்களுடனான கிராம விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன் குமார் தலைமையில், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் உதயசூரியன் முன்னிலையில் நேற்று நடைபெற்றது.இக்கூட்டத்தில் கிராமப்புறப்பகுதிகளில் வங்கியின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வினை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்காக இந்தியன் வங்கி சார்பில், அனைத்து வங்கியாளர்களுடன் கிராமவிழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. பாதுகாப்பான வங்கி நடைமுறைகளை பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அனைத்து வங்கிகளும் கிராமப்புற வளர்ச்சிகளுக்கு தனிநபர் கடன், தொழில் முனைவோர் கடன் மற்றும் மகளிர்சுய உதவிக்குழு கடன்களை அதிகளவில் வழங்கி உதவிட வேண்டும், கிராமங்களில் வங்கிகளின் சேவைகள் குறித்தவிழிப்புணர்வு பணிகளை வங்கிகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், கிராமப்புற பகுதிகளில் உள்ள பொதுமக்கள் வங்கிகளின் நவீன தொழில்நுட்ப பயன்பாடுகளை அறிந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும்,மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் வங்கிகளில் பெறும் சுழற்நிதி கடன்களைதவணை தவறாமல்செலுத்திதொடர்ந்து, கடனுதவிகளை பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்றிக் கொள்ள வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, பிரதம மந்திரி பீம சுவேக்ஷ யோஜனா திட்டத்தில் காப்பீடு செய்த வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 2 இலட்சத்திற்கான காசோலையினையும், பிரதம மந்திரி வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை உறுதியளிக்கும் திட்டத்தின் கீழ் 3பயனாளிகளுக்கு ரூபாய் 12.75 இலட்சம் மதிப்பீட்டிலான தொழிற் கடனுதவிகளுக்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.முன்னதாக, இந்திய ரிசர்வ் வங்கி நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை அலுவலகம் சார்பில், நீதியியல் விழிப்புணர்வு செய்திகள் என்ற விழிப்புணர்வு கையேட்டினைமாவட்ட ஆட்சித்தலைவர் வெளியிட சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் பெற்றுக்கொண்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மணி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் அன்புமணிமாறன், வேளாண்மை இணை இயக்குநர் வேல்விழி, கால்நடைத்துறை இணைஇயக்குநர் (பொ) சாந்தி, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் பவித்ரா, மாவட்ட தாட்கோ மேலாளர் மணிமேகலை, இந்தியன் வங்கிஉதவி பொது மேலாளர் சுதர்சணன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முனீஸ்வரன், நபார்டுவங்கிமாவட்ட வளர்ச்சி மேலாளர் பாலமுருகன், மாவட்டதொழில்மைய பொது மேலாளர் சந்திரசேகரன், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தென்காசி மாவட்டம் புளியங்குடியில் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளராக பொறுப்பேற்ற சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ. ராஜா, புளியங்குடி திமுக நகர செயலாளர் எ. அந்தோணிசாமி தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பெருந்தலைவர் காமராஜர், மகாத்மா காந்தி, பசும்பொன் உ. முத்துராமலிங்க தேவர், தியாகி இமானுவேல் சேகரன், சுதந்திரப் போராட்ட வீரர் மாமன்னர் பூலித்தேவர், திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் நகரச் செயலாளர் அந்தோணிசாமி, அவைத்தலைவர் வேலுச்சாமி பாண்டியன், நகரத் துணைச் செயலாளர்கள் கருப்பசாமி, ஆசைக்கனி, காந்திமதி அம்மாள், பொருளாளர் காஜாமைதீன், நகர செயற்குழு உறுப்பினர் அருணாச்சலம், மாவட்ட பிரதிநிதி சுரேஷ், ஆனந்தராஜ், கார்த்திக், பெருமாள் மாரிச்செல்வம், புளியங்குடி நகர் மன்ற உறுப்பினர்கள் கவிதா மகேஷ், ஸ்டீபன் ராஜேஸ்வரி, தங்கம்மாள், எஸ்ரா அருணா தேவி, அண்ணாமலை, உமா மகேஸ்வரி, மணிமாறன், பரமசிவம், குட் லக் நடராஜன், கரிகாலன், கவிதா மாரியப்பன், பொன்னு துரைச்சி,செந்தாமரை, சக்தி முருகேஷ், வேலாயுதம், சந்திரன், பி மைதீன், பா. கருப்பசாமி,மாரிச்செல்வம், சிங்கிலி பட்டி மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஜெகதீஷ், சிவகிரி பேரூராட்சி தலைவர் கோமதி சங்கரி, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சுந்தர வடிவேல், நகரச் செயலாளர் செண்பக விநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு திமுக வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா-க்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

வரலாறு நாளிதழ்
நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை
காலிப் பணிஇடங்கள் 2
PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN
தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட
செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்
மேலும் தொடர்புக்கு :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534

வரலாறு நாளிதழ்
நிறுவனத்தில் பணிபுரிய
செய்தியாளர்கள் தேவை
நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை
தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகாக்கள் வாரியாக
பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை.
தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்.
தாபால் அனுப்பவேண்டிய முகவரி :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# பேரணியில் துப்பாக்கிச் சூடு உயிர் தரப்பினார் இம்ரான் கான்

# ஆலங்குடியில் பெண்ணிடம் நகை பறிப்பு பொதுமக்கள் அச்சம்





# தொடர்ந்து ஏவுகணைகளை ஏவும் வடகொரியா உலக நாடுகள் அதிர்ச்சி


சென்னை / புதுக்கோட்டை | 04.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

வாசுதேவ் பல்வந்த் பட்கே , இந்தியப் புரட்சியாளர் (பி.1845) (இ.1883)



ஜம்னாலால் பஜாஜ் , இந்தியத் தொழிலதிபர் (பி.1884) (இ.1942)



ஜானகி அம்மாள், , இந்தியத் தாவரவியலாளர் (பி.1897) (இ.1984)



வீ கிம் வீ , சிங்கப்பூரின் 4வது குடியரசுத் தலைவர் (பி.1915) (இ.2005)



சகுந்தலா தேவி , இந்தியக் கணிதவியலாளர், வானியலாளர் (பி.1929) (இ.2013)



## இன்றைய நினைவு நாள்

டி. கே. இராமானுஜக் கவிராயர் , தமிழறிஞர், புலவர் (பி.1905) (இ.1985)



ஜேம்ஸ் இரத்தினம் , ஈழத்து எழுத்தாளர் (பி.1905) (இ.1988)

